கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், நாமக்கல்

முன்னிலை:-  திரு R. சுந்தரையா, B.Sc., B.L.,

கூடுதல் மாவட்ட  நீதிபதி,  நாமக்கல்

2022 ம் ஆண்டு அக்டோபர்  மாதம் 31 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2053, ஸ்ரீ சுபகிருது  வருடம் ஐப்பசி மாதம் 14 ம் தேதி)

**O.S.No.31/2021**

(CNR.No.TNNM01-000110-2021)

ராசம்மாள் (எ) ராஜம்மாள் ..வாதி

-எதிராக-

1) செல்லம்மாள்
2) ராஜீ
3) பிரபாகரன்
4) தங்கம்மாள்
5) ராஜவேல்
6) பவித்ரா ..பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 17.10.2022 ம் தேதி கொண்டு வரப்பட்டு  வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு A. குணசேகரன் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு  பி. முருகேஷ் அவர்களும் ஆஜராகியும் வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்பதால் பிரதிவாதிகள் வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பார்வையிட்டும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

1) தாவா  சொத்துக்களை நலந்திகடு கலந்து 3 சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் ஒரு பாகத்தை  வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அதனை அனுசரித்து இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வகை செய்தும், தாவா இறுதி முடிவாகும் வரை தாவா சொத்தில் வாதிக்குண்டான 1/3 பாகத்தை பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க பராதீனமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், தாவா செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படியும் வாதியால் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள  கட்டளை  7  விதி 1 முதல் 6 பிரிவு 151 சிபிசி. ன்  கீழான வழக்குரையின் சுருக்கம் பின் வருமாறு** -

தாவா சொத்துக்கள் பரமத்தி வேலூர் வட்டத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் 13.09.1996, 14.09.01981 ஆகிய தேதிகளில் கிரயம் பெற்றுள்ளார் என்றும், இதர சொத்துக்கள் வாதிக்கு பூர்வீமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், 1ம் பிரதிவாதியானவர் வாதியின் சகோதரரான இறந்து போன பொன்னுசாமியின் மனைவி. 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மக்கள் என்றும், 4ம் பிரதிவாதியானவர் வாதியின் சகோதரரான இறந்து போன வேலுசாமியின் மனைவி. 5,6 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியின் மக்கள் என்றும், தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் வாதியின் தாத்தா ராசாக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும், ராசாக்கவுண்டரின் வாரிசுகளான கந்தசாமி கவுண்டர், மாரப்ப கவுண்டர், வீரப்பக் கவுண்டர் ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்து வாய் மொழியாக பாகம் பிரித்து கொண்டதன் அடிப்படையில் தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் கந்தசாமி கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளான வாதி, பொன்னுசாமி, வேலுசாமி ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் பொன்னுசாமி என்பவர் 1997ம் ஆண்டு 1 முதல் 3 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டதாகவும், அதன் பின்னர் வாதி, கந்தசாமி, வேலுச்சாமி 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், அதன் பின்னர் வாதியின் தகப்பனாரான கந்தசாமி என்பவர் 09.01.2009ம் தேதி விருப்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் இறந்த பின்னர் வாதியின் தாயாரான நல்லம்மாள், வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள், வேலுசாமி ஆகியோர் கூட்டாக அனுபலவம் செய்து வந்த நிலையில் வேலுசாமி என்பவர் 10.03.2015ம் தேதி விருப்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் காலமான பின்னர் வாதியின் தாயார், வாதி, 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்த பின்னர் கந்தசாமியின் மனைவியான நல்லம்மாள் 09.02.2020ம் தேதியன்று விருப்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றும், அதனால் தாவா சொத்துக்களை வாதி, 1 முதல் 6 பிரதிவாதிகள் கூட்டாக சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், 20.08.2020ம் தேதியன்று பிரதிவாதிகளிடம் வாதி அவருக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்குமாறு கேட்டதற்கு பிரதிவாதிகள் மறுத்து விட்டதாகவும், தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்றும், வாதிக்குரிய 1/3 பாகத்திற்கு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், தாவா இறுதி முடிவாகும் வரை வாதிக்குரிய 1/3 பாகத்தை பிரதிவாதிகள் எவ்வித வில்லங்க பராதீனமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும், தாவா செலவுத் தொகை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டியும், நீதிமன்றத்திற்கு உகந்த பரிகாரம் வழங்க வேண்டியும் வாதியால் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1, 3 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்ட 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சாராம்சம் வருமாறு</u>

தாவா சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், வழக்குரையில் உள்ள உறவுமுறைகளை ஒப்புக்கொண்டும், தாவா 1,2 இனச்சொத்துக்களை கந்தசாமி கவுண்டர் கிரய

ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றார் என்பதை ஒப்புக்கொண்டும், பூர்வீக குடும்ப சொத்துக்களில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு கந்தசாமி என்பவர் 1,2 இனச்சொத்துக்களை கிரயம் பெற்றிருப்பதால் அவைகளை பூர்வீக குடும்ப சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களை ராசாக்கவுண்டர் அனுபவம் செய்து வந்த நிலையில் அவர் காலமான பின்னர் அவருடைய வாரிசுகளான கந்தசாமி கவுண்டர், மாரப்ப கவுண்டர், வீரப்பக் கவுண்டர் ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதை ஒப்புக்கொண்டும், பொன்னுசாமி, வேலுசாமி, வாதியின் தகப்பனார் கந்தசாமி, தாயார் நல்லம்மாள் ஆகியோர்கள் இறந்ததை ஒப்புக்கொண்டும், வாதிக்கு 1987ம் ஆண்டுக்கு முன்பே திருமணம் நடைபெற்று கணவருடன் வசித்து வருகிறார் என்றும், வாதி ஒரு போதும் தாவா சொத்தில் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றும், வாதியை பொறுத்து உடைமை நீக்கம் (ouster) செய்யப்பட்டுவிட்டார் என்றும், தாவா சொத்தை பிரதிவாதிகள் மட்டும் அனுபவம் செய்து வருவதாகவும், ஏற்கனவே வாதியின் திருமணத்திற்காக சீர்வரிசைகள் நல்லமுறையில் செய்யப் பட்டுள்ளது என்றும், ஆகையால் வாதியின் உரிமை அற்றுபோய்விட்டது என்றும், வாதி வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) <u>**11.02.2022ம் தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**</u>

1) தாவா சொத்துக்கள் இந்துக் கூட்டுக் குடும்ப பாகப்பிரிவினையாகாத சொத்துக்கள் என வாதி கூறியிருப்பது சரியா?

2) வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர் மற்றும் அவரது சகோதரர்களான மாரப்ப கவுண்டர், வீரப்ப கவுண்டர் ஆகியோர்களுக்கிடையே ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதென்று வாதி கூறியிருப்பது சரியா?

3) தாவா சொத்துக்களை பொறுத்து வாதி உடைமை நீக்கம் (OUSTER) செய்யப்பட்டு விட்டார் என பிரதிவாதிகள் கூறியிருப்பது சரியா?

4) வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளதென வாதி கூறியிருப்பது சரியா?

5) வாதி கோரியுள்ள முதல் நிலைத் தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

6) வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) வாதி தரப்பில் வாதி ராசம்மாள் (எ) ராஜம்மாள் என்பவர் வா.சா.1 ஆகவும், சுப்பிரமணியம் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்பட்டும், 24.08.2022ம் தேதியன்று செலவுத் தொகையின் பேரில் இறுதியாக ஒத்தி வைக்கப்பட்ட போது 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் பிரதிவாதிகளை அழைக்கவேண்டுமென்று பிரதிநிதித்துவம் செய்ததால் 1 முதல் 6 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும் ஆஜராகவில்லை என்பதால் ஒருதலைப்பட்சமாக தீர்லமானிக்கப்பட்டு வா.சா.1ன் சாட்சியம் முடிக்கப்பட்டு அதன் பின்னர் வா.சா.2 ஆனவர் 16.09.2022ம் தேதியன்று விசாரிக்கப்பட்டுள்ளார். இத்துடன் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றதாக மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்த போது தாவா 1,2 இனச்சொத்துக்கள் வா.சாஆ.1,2 கிரய ஆவணங்களின் அடிப்படையில் வாதியின் தகப்பனார் பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் வாதியின் பாட்டனாரான ராசாக்கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வாதியின் தகப்பனார் கந்தசாமியின் உடன் பிறந்த சகோதரர்களான மாரப்ப கவுண்டர், வீரப்பக் கவுண்டர் ஆகியோர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதன் அடிப்படையில் தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், வாதியின் உடன் பிறந்த சகோதரரான பொன்னுசாமி என்பவர் 1 முதல் 3 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு 1997ம் ஆண்டிலும், மற்றொரு சகோதரரான வேலுசாமி என்பவர் 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு 2015ம் ஆண்டிலும் காலமாகிவிட்டார்கள் என்றும், வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர் மற்றும் தாயார் நல்லம்மாள் ஆகியோர் விருப்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் இறந்துள்ளதால் தாவா சொத்துக்களை வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், வா.சா.ஆ.3 முதல் 8 வரையான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதியின் பூர்வீக குடும்ப சொத்துக்கள் என்பது வாதி தரப்பு வழக்கானது சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்துக்களைப் பொறுத்து கந்தசாமி கவுண்டரும் அவருடன் பிறந்த சகோதரர்களும் வாய்மொழியாக செய்து கொண்ட பாகப்பிரிவினையை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் வாதிக்கு 1987ம் ஆண்டுக்கு முன்பே திருமணம் நடைபெற்றுள்ளதால் அவர் உடைமை நீக்கம் செய்யப்பட்டுவிட்டார் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்து வாரிசுரிமை திருத்தச்சட்டம் 39/2005 ன் கீழ் வாதிக்கும் பூர்வீக குடும்ப சொத்துக்களில் பிறப்பின் அடிப்படையில் பாகம் கிடைக்கத்தக்கது என்பதாலும் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்பதால் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்றும், வா.சா.1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையிலும், பிரதிவாதிகள் வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும் வாதி தரப்பு வழக்கானது மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் வாதி கோரியவாறு தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டும் என்றும் வாதத்தின் போது எடுத்துரைத்தார்.

8) <u>1 வது எழுவினாவிற்கான தீர்வு</u>

இறந்து போன கந்தசாமி கவுண்டருக்கு நல்லம்மாள் என்பவர் மனைவியாவார். மேற்படி இருவருக்கும் வாதியான ராசம்மாள் (எ) ராஜம்மாள் என்ற மகளும், பொன்னுசாமி, வேலுசாமி என்ற இரண்டு மகன்களும் வாரிசுகள் என்பதும், மேற்படி பொன்னுசாமி என்பவர் அவருடைய மனைவியான 1 ம் பிரதிவாதி மக்களான 2,3 பிரதிவாதிகள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டார் என்பதும், வாதியின் மற்றொரு சகோதரரான வேலுசாமி என்பவர் அவருடைய மனைவியான 4ம் பிரதிவாதி, மக்களான 5,6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்பதும், வாதி

மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையேயுள்ள உறவுமுறையும் வாதி மற்றும் பிரதிவாதிகளால் ஒப்பக்கொள்ளப்பட்டுள்ளது.

9) வாதி தரப்பில் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர் என்பவர் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்பதால் தாவா 1, 2 இனச்சொத்துக்களும், தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்களும் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும் நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

10) வாதியின் தந்தையான கந்தசாமி கவுண்டரின் தகப்பனாரான ராசாக்கவுண்டருக்கு தாவா 3 முதல் 7 இனச்சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றும், வாதியின் தந்தை கந்தசாமி கவுண்டர், அவருடன் பிறந்த சகோதரர்களான மாரப்பக் கவுண்டர், வீரப்பக் கவுண்டர் ஆகியோர்கள் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்பதை வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

11) வா.சா.ஆ.1 ஆன 13.09.1996ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் சான்றிட்ட நகல், வா.சா.ஆ.2 ஆன 14.09.1981ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் ஆகியவற்றை பார்வையிடும் போது தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தந்தையான கந்தசாமி கவுண்டர் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.3 ஆக தாவா 1வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்ட கூட்டுப்பட்டா எண் 489 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. பிரதிவாதிகள் தரப்பில் கூட்டுக் குடும்ப சொத்தில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு தான் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான கந்தசாமி கவுண்டர் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்று எதிர் வழக்குரையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் 1 முதல் 6 பிரதிவாதிகள் வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து வருமானம் வந்தது என்பது பிரதிவாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்படவில்லை என்பதால் தாவா 1,2 இனச்சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானதாதைக்கொண்டு வாதியின் தகப்பனாரான கந்தசாமி கவுண்டர் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என்ற கூற்றானது சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் தரப்பில் மெய்ப்பிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது.

12) வா.சா.ஆ.1,2 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளதால் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான கந்தசாமி கவுண்டரின் சுயார்ஜித சொத்துக்கள் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கூட்டுப்பட்டா எண் 11832யை பார்வையிடும் போது கந்தசாமி கவுண்டரின் மனைவியான நல்லம்மாள், ராமசாமியின் மனைவி

ராசம்மாள், பொன்னுசாமியின் வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள், வேலுசாமியின் வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டாவானது தாவா 3 வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.5 ஆன கூட்டுப்பட்டா எண் 1596 யை பார்வையிடும் போது வாதியின் தகப்பனார் கந்தசாமி மற்றும் அவருடன் பிறந்த சகோதரரான கொளந்தாக்கவுண்டர், நல்லம்மாள், 3 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டா தாவா 4 வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.6 ஆன கூட்டுப்பட்டா எண் 1914 யை பார்வையிடும் போது வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர், அவருடன் பிறந்த சகோதரர்களான மாரப்பக் வுண்டர், வீரப்பக் கவுண்டர் மற்றும் ராசப்பன், பழனியம்மாள், பாப்பாயி, சுப்பிரமணியன், மணி, பழனியப்பன், நடாஜன், ஆறுமுகம் மற்றும் கந்தசாமி மனைவி நல்லம்மாள், 4 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டா தாவா 5 வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.7 ஆன கூட்டுப்பட்டா எண் 890 யை பார்வையிடும் போது வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர், அவருடன் பிறந்த சகோதரர்களான மாரப்பக் வுண்டர், வீரப்பக் கவுண்டர் மற்றும் கந்தசாமி மனைவி நல்லம்மாள், 4 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டா தாவா 6 வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.8 ஆன கூட்டுப்பட்டா எண் 196 யை பார்வையிடும் போது வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர், தங்கம்மாள், 3ம் தரப்பினர்களான மைனர் மகேஸ்வரி, மைனர் சுகுணா, மைனர் ரமேஷ், கந்தசாமி கவுண்டரின் மனைவி நல்லம்மாள், 4 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் வழங்கப்பட்ட கூட்டுப்பட்டா தாவா 7 வது இனச்சொத்தைப் பொறுத்து வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.4 யை பார்வையிடும் போது தாவா 3 வது இனச்சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதிகள் குடும்ப உறுப்பினர்கள் பெயர்களில் வழங்கப்பட்ட பட்டா என்பதால் தாவா 3 வது இனச்சொத்தானது வாதியின் குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) வா.சா.ஆ.5 முதல் 8 வரையான கூட்டுப்பட்டாக்களை பார்வையிடும் போது கந்தாமியின் குடும்ப உறுப்பினர்கள் அல்லாத 3ம் தரப்பினர்கள் பெயர்களிலும் கூட்டுப்பட்டா காணப்படுவதால் தாவா 4 முதல் 7 இனச்சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் கந்தசாமி கவுண்டரின் குடும்பத்திற்கு எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டது என்பதற்கு வாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால், வழக்குரை 4 முதல் 7 இனச்சொத்துக்கள் கந்தசாமி கவுண்டருக்கு மட்டும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது வாதி தரப்பில் மெய்ப்பக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆகையால் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், 3 வது இனச்சொத்தானது வாதியின் பூர்வீக குடும்ப சொத்து என்றும், 4 முதல் 7 இனச்சொத்துக்கள் வாதியின் பூர்வீக சொத்துக்கள் என்பதை வாதி தரப்பில் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் முதலாவது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

15) <u>2 வது எழுவினாவிற்கான தீர்வு</u>

இறந்து போன ராசாக் கவுண்டரின் வாரிசுகளான வாதியின் தந்தை கந்தசாமி கவுண்டர் அவருடன் பிறந்த மாரப்பக் கவுண்டர், வீரப்பக் கவுண்டர் ஆகியோர்கள் வாய்மொழியாக சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டதாக வாதி தரப்பிலும், பிரதிவாதிகள் தரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதால் 2 வது எழுவினாவானது வாதிக்கு சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

16) <u>3 வது எழுவினாவிற்கான தீர்வு</u>

வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் அவருடன் பிறந்த சகோதரர்களான பொன்னுசாமி, வேலுசாமி ஆகியோர்களுக்கு தலா 1/3 பாகம் உள்ளது என்றும், ஆகையால் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்று வழக்காடப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில் ஏற்கனவே வாதிக்கு 1987ம் ஆண்டிற்கு முன்பே திருமணம் செய்யப்பட்டுவிட்டதாலும், முறையாக சீர்வரிசை செய்யப்பட்டுவிட்டதாலும் திருமணத்திற்கு பிறகு வாதி தாவா சொத்தில் ஒருபோதும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றும், அதனால் உடைமை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது. பெண் ஒருவர் திருமணமாகி அவர் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்ட காரணத்தாலேயே கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து உடைமை நீக்கம் செய்யப்பட்டார் என்ற கோட்பாடானது பொருந்தாது என்பதாலும், தாவா சொத்தைப் பொறுத்து வாதியானவர் உடைமை நீக்கம் செய்யப்பட்டு விட்டார் என்று பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்படும் வாதமானது எற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்பதால் 3 வது எழுவினாவானது பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

17) <u>4 வது எழுவினாவிற்கான தீர்வு</u>

ஏற்கனவே முதலாவது எழுவினாவில் தாவா 1,2 இனச்சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கந்தசாமி கவுண்டரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும், 3 வது இனச்சொத்தானது வாதியின் பூர்வீக குடும்ப சொத்து என்றும் தீர்வு காணப்பட்டுள்ளதால் 4 முதல் 7 இனச்சொத்துக்களைப் பொறுத்து வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்வு காணப்படுகிறது. தாவா 1,2 இனச்சொத்துக்களைப் பொறுத்து **இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8**ன் கீழும், தாவா 3 வது இனச்சொத்தானது பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் **இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம் பிரிவு 6** மற்றும் **2020 (3) TNLJ 174 (Civil) Vineeta Sharma VS Rakesh Sharma and others (FB)** என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற முழு ஆய முன் தீர்ப்பு நெறியின் அடிப்படையிலும் **இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டம் 39/2005**ன் கீழும், மகளுக்கு பிறப்பின் அடிப்படையிலேயே பங்குரிமை சொத்தில் பங்குரிமையர் என்ற அடிப்படையில் பாகம் கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாலும், கந்தசாமி கவுண்டரின் இறப்பு சான்று வா.சா.ஆ.9 ஆகவும், அவரது வாரிசு சான்று வா.சா.ஆ.10 ஆகவும், கந்தசாமி கவுண்டரின் மனைவியும் வாதியின் தாயாருமான நல்லம்மாள் என்பவரின் இறப்பு சான்று வா.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப் பட்டுள்ளதால் இறந்து போன கந்தசாமி கவுண்டரை பொறுத்தமட்டில் மகளான

வாதியும், இறந்து போன மகன்களான பொன்னுசாமி, வேலுச்சாமி ஆகிய 3 பேர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதால் தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் மேற்படி மூவருக்கும் தலா 1/3 பாகம் கிடைக்கத்தக்கதாகும். பொன்னுசாமிக்குரிய 1/3 பாகம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும், வேலுசாமிக்குரிய 1/3 பாகம் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் கிடைக்கத்தக்கதாகும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்வதால் தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகமும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும், 4 முதல் 6 பிரதிவாதிகளக்கு 1/3 பாகமும் பங்குள்ளது என்று 4 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

18) **<u>5 வது எழுவினாவிற்கான தீர்வு</u>**

தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்பதால் தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகத்திற்கு மட்டும் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி 5 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

19) **<u>6 வது எழுவினாவிற்கான தீர்வு</u>**

5 வது எழுவினாவில் வாதிக்கு தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் 1/3 பங்கிற்கு முதல் நிலைத்தீர்ப்பாணை பரிகாரம் கிடைக்கத்தக்கது எனதீர்வு காணப்பட்டுள்ளதாலும், வாதிக்குரிய 1/3 பாகத்தை பராசீனம் செய்தால் பிற்காலத்தில் பல வழக்குகள் எழக்கூடும் என்பதால் தாவா 1 முதல் 3 இனச்சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதாகும். தாவா 4 முதல் 7 இனச்சொத்துக்களில் வாதி கோரியுள்ள முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருப்பதால் 4 முதல் 7 இனச்சொத்துக்களைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் பால் சிறந்தது என்று தீர்மானிக்கப்படுகிறது. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையேயுள்ள உறவுமுறையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை என்று 6 வது எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

20) இறுதியில் 1 முதல் 6 பிரதிவாதிகள் வருகையில்லா தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகமும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1/3 பாகமும் பங்குள்ளது என்று விளம்புகை செய்தும், தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் வாதிக்குரிய 1/3 பாகத்தை பொறுத்து முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியும், தாவா 1 முதல் 3 இனச்சொத்துக்களில் அசல் வழக்கு முடியும் வரை வாதிக்குரிய 1/3 பாகத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித வில்லங்கப் பராதீனமும் செய்யக்கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கியும் உத்தரவிடப் படுகிறது. தாவா 4 முதல் 7 இனச்சொத்துக்ளைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 - ஆம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

R SUNDARIAH
Digitally signed by R SUNDARIAH
Date: 2022.10.31 16:56:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்.

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 திருமதி ராசம்மாள் (எ) ராஜம்மாள் (வாதி)
வா.சா.2 திரு சுப்பிரமணியம்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.09.1996 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.09.1981 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 24.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட பட்டா எண் 489 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4 | 24.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண் 11832 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.5 | 24.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண் 1596 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.6 | 29.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண் 1914 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.7 | 24.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண் 890 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.8 | 24.12.2020 | வாதியின் தந்தை கந்தசாமி பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா எண் 196 இணையதள பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.9 | 09.01.2009 | வாதியின் தந்தை கந்தசாமியின் இறப்பு சான்று அசல் |
| வா.சா.ஆ.10 | 19.06.2009 | வாதியின் தந்தை கந்தசாமியின் வாரிசு சான்று சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | 09.02.2020 | வாதியின் தாயார் நல்லம்மாள் என்பவரின் இறப்பு சான்று இணையதள பதிவிறக்க நகல் |

R SUNDARIAH
Digitally signed by R SUNDARIAH
Date: 2022.10.31 16:56:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்.